வாக்குமூலம்

தலைமை குற்றவியல் நீதிமன்றம், இராமநாதபுரம்

வழக்கு எண் C.C. No.23/2023

வழக்கு சாட்சி – PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :: சிவபாலன் | தொழில் | :: |
| த/க பெயர் | :: | வயது | :: |
| கிராமம் | :: | | |
| தாலுகா | :: | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 19.05.2025.

எதிரி ஆஜர்.

**முதன்மை விசாரணை** (நேரம் : நண்பகல் 12.15 மணி)

நான் இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் தாலுகா, பனைக்குளம் சோகையன் தோப்பு கிராமத்தில் வசித்து வருகிறேன். கேட்டரிங் தொழில் செய்து வருகிறேன். வாகனத்தில் விபத்தில் இறந்து போன கோவிந்தராஜ் என் அப்பா. சா.ப.சா.2 கணேசனை தெரியும். ஆஜர் எதிரியை தெரியாது. கடந்த 09.08.2022ம் தேதி என் சித்தப்பா ராமநாதன் என் அப்பா சோகையன் தோப்பிலிருந்து அழகன்குளத்திற்கு பக்கத்துவீட்டைச் சேர்ந்த கணேசன் ஓட்டிச் சென்ற பைக்கில் பின்னால் அமர்ந்து செல்லும்போது சாமியார் மடம் அருகே எதிரே வந்த கார் மோதி விபத்து ஏற்பட்டதாகவும், என் அப்பாவிற்கு காயம் ஏற்பட்டு இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்துள்ளதாகவும் சொன்னார். நான் உடனே இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு இரவு 07.30 மணியளவில் சென்றுபோய் பார்த்தேன். என் அப்பாவிற்கு தலையின் பின்புறம் அடிபட்டு இருப்பதால் பார்க்கமுடியாது என கூறி மதுரைக்கு கொண்டுசெல்லும் படி கூறினார்கள். மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தோம். 4, 5 நாட்கள் சிகிச்சை பெற்ற என் அப்பா சிகிச்சை பலனின்றி

இறந்துவிட்டார். பிரேத பரிசோதனைக்கு பின்பு என் அப்பாவின் உடலை ஒப்படைத்தார்கள். நாங்கள் எங்கள் ஊருக்கு கொண்டு வந்து உடலை அடக்கம் செய்தோம். நான் பன்னிரெண்டாம் வகுப்பு படித்துள்ளேன். நான் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் இருக்கும்பொழுது என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். நான் எழுதிய பேப்பரில் தான் கையெழுத்து போட்டு கொடுத்தேன். **அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1.** என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. நான் படித்துப்பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** : இல்லை.

(ஒம்/– சி.மோகன்ராம்)
தலைமை குற்றவியல் நடுவர்,
இராமநாதபுரம்.